பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 13 திங்கட்கிழமை 29.07.2024 கதிர் 264

## இது ரகசியம் அல்ல!

கறுப்பு ஜூலை எனப்படும் 1983 ஆடிக்கலவரங்களின்நினைவேந்தல் நிகழ்வுகள் கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணத்தில் நடந்தன. தந்தை செல்வா அரங்கில் அடுத்தடுத்த நாள்களில் இந்த இரு நிகழ்வுகளும் நடந்தன. எதிர்கால அரசியல் போக்கையும் அரசியல் பலத்தையும் கணிப்பிடக்கூடிய நிகழ்வுகளாக இதனைப்பார்க்கலாம்.

முதல் நிகழ்வு சனிக்கிழமை நடந்தது. அது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ரெலோவின் யாழ். மாவட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்தலைமையில்நடந்தது நிகழ்வு. ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்தக் கூட்டத்தில் ஜனநாயகக் கூட்டணியின் புதிய கூட்டாளிகளான தமிழ் மக்கள் பொதுச் சபையினைச் சேர்ந்த நிலாந்தன், யோதிலிங்கம், பேராசிரியர் கணேசலிங்கம் ஆகியோரும் ஐங்கரநேசனும் கலந்துகொண்டிருந்தனர். இவர்களைத் தவிர இன்னும் சிலரையும் அந்தக் கூட்டத்தில் காணமுடிந்தது. விக்னேஸ்வரன் ஐயா 'மிஸ்ஸிங்'. 7 தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலுக்காக ஏற்படுத்திய பொதுக் கட்டமைப்பின் -புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த பெரும்பாலானமுகங்களையும் ☞ 2

## தெரிவத்தாட்சி அலுவலர்கள் மாவட்ட ரீதியாக நியமனம்

மாவட்டச் செயலர்களை தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பணிகள் குறித்துவெளிப்படுத்துகையிலேயே அவர் இனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

மாவட்ட செயலாளர்களை ஆகியோரை தேர்தல்மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் அரச ஊழியர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அறிவுறுத்தும்வகையில் விசேட சுற்றறிக்கை இவ்விரு நாட்களில் வெளியாகும். தேர்தல் செயற்பாடுகளுக்குச் சகலஅரசஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் பணிகளின் போது பாதுகாப்பு நடவடிக்கையில் ☞ 8

## பெரமுனவின் 80 வீதமானோர் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

### ஐ.தே.க. உதப தலைவர் அகிலவிராஜ் தெரிவிப்பு

பொதுஜனபெரமுனவின் தலைவர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்குஆதரவளிப்பதாகதெரிவித்திருக்கிறார்கள். அந்த கட்சியின் நூற்றுக்கு 80 வீதமானவர்கள் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கிறார்கள். அதேபோன்றுதமிழ், முஸ்லிம்கட்சிகளின்ஆதரவும் ரணில் விக்ரமசிங்கவுக்கே இருக்கிறது என்று ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுஇடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டுஉரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை தொங்கு பாலத்தில் சென்றுதான் முன்னேற்ற வேண்டிய நிலைஇருந்தபோது,நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. ஆனால் ரணில் விக்ரமசிங்க தனி மனிதனாகஇருந்துகொண்டு நாட்டைப் பொறுப்பேற்று தொங்குபாலத்தைதற்போது கடந்துள்ளார்.

தொங்கு பாலத்தைக் கடந்த பின்னர் தற்போது பலரும் ஆட்சி அதிகாரத்தை தங்களுக்கு வழங்குமாறு தெரிவித்து வருகின்றனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டு மக்கள் எவ்வாறான கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து வந்தார்கள் என்பதை மந்துவிடக்கூடாது. ரணில் விக்ரமசிங்க தனி ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலில்

# தமிழர்கள் வாக்களிக்காவிட்டால் அது தெற்கைப் பலப்படுத்திவிடும்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தலில் தமிழர்கள்வாக்களிக்காதுவிட்டால் அது தெற்குக்குப் பலமாகிவிடும். மூளையை உபயோகித்து எமது அரசியலைமேற்கொள்ளவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கறுப்பு ஜூலையின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில்நேற்றுநடைபெற்றது. இதில் கலந்துகொண்டு ☞ 2

## ஜனாதிபதித் தேர்தல் குறித்த பெரமுனவின் முடிவு இன்று

ஶ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் முன்னிலை உறுப்பினர்கள் உட்பட சுமார் 40 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் ஜனாதிபதியுடன் அரசியல் கூட்டங்களில் ஒன்றிணைந்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து உறுதியான தீர்மானத்தை எடுக்க பொதுஜனபெரமுனவின் நிறைவேற்று சபை இன்று கூடவுள்ளது.

இதன்போது பெரும்பாலும் ☞ 8

### பொலிஸ் மா அதிபரின்றி தேர்தல் நடக்காது

## சபாநயகரும் பிரதம நீதியரசரும் உடன் பிரச்சினையைப் பேசி தீர்க்கவேண்டும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில்எழுந்துள்ளசட்டச்சிக்கல்களை நாடாளுமன்ற சபாநாயகரும் பிரதம நீதியரசரும் பேசித் தீர்க்கவேண்டும். பொலிஸ் மா அதிபர் இல்லாமல் தேர்தல் நடக்காது. அதற்கு இடமளிக்காது தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என்று ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹோமாகம பஸ்தரிப்பு நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்ற'ஜெயகமுஶ்ரீ லங்கா'கொழும்புமாவட்ட புலம்பெயர்தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தர். அங்கு அவர் மேலும்தெரிவித்ததாவது:

புலம்பெயர்தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பிய பணத்தினாலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் ☞ 2

## பொருளாதார நெருக்கடிகளுக்கு நல்லாட்சி நாயகர்களே பொறுப்பு

### நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி நாயகர்களே பொறுப்புக் கூறவேண்டும் என்று பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியலில் பெரும் சவால்களை எதிர்கொண்டோம். ☞ 8

## மக்களை ஏமாற்றிய ஆளும்தரப்புக்கு மக்களே தக்க பாடம் புகட்டுவார்கள்

### பழனி திகாம்பரம் எம்.பி. எச்சரிக்கை

மக்களைஏமாற்றும் இந்த ஆளும்தரப்புக்கு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள் என்றுதமிழ்முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும்,தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம்தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ☞ 2

## முரண்களை ஏற்படுத்தவே ஜனாதிபதி ரணில் முயற்சி

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில் தொடர்ச்சியாக முரண்பாடுகளை ஏற்படுத்தவே ஜனாதிபதி ரணில்முயற்சிக்கின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு சகல நடவடிக்கைகளும் ☞ 2

## தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த உப குழுக்கள் நேற்று நியமனம்

### பொதுக் கட்டமைப்பு நடவடிக்கை

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்றுக்கூடிதமிழ்தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கான உப குழுக்களை நியமித்துள்ளது.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் விசேட கூட்டம் ☞ 8

## நாடாளுமன்றம் – நீதித்துறைக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றார் ரணில்

### பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

நாடாளுமன்றத்துக்கும், நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில்செயற்படுகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

வாதுவ போதிராஜ விகாராதிபதி கோட்ட ஶ்ரீ கல்யாணி சமகி தம்ம மகா சங்க சபையின் மநாயக்கர் கொடபிடியே ராகுல தேரரை நேற்று சந்தித்து அரசியல் நிலைவரங்கள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இந்தக் கூட்டத்திலும் பார்க்க முடிந்தது. எண்ணிக்கையில் குறைவானோரே கூட்டத்தில் பங்கெடுத்திருந்தனர்.

இரண்டாவது நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. தமிழ் அரசுக் கட்சி இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. ஜனநாயகக் கூட்டணியின் நிகழ்வோடு ஒப்பிடும்போது இந்தக் கூட்டத்திற்கு அதிகளவில் மக்கள் வந்திருந்தனர். அவர்கள் திரட்டி வரப்பட்டிருக்கக்கூடும் என்றாலும் மக்களைத் திரட்டும் சக்தி, வசியம் ஜனநாயகக் கூட்டணியைவிடவும் தமிழ் அரசுக் கட்சியிடம் இருக்கிறது என்பதைச்சான்றுப்படுத்தியதுஅந்தக் கூட்டம். ஜனநாயகரீதியாக ஆதரவுத் தளத்தையும் வாக்கு வங்கியையும் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்தும் தக்கவைத்திருக்கிறது என்பது இதன் மூலம் புலப்படுகின்றது. கட்சியை மறுசீரமைத்து, புதிய-குருதிபாய்ச்சி, இளைஞர்களை முதன்மைப்படுத்தி புதிய உத்வேகத்தை வழங்கினால் அதுதொடர்ந்துமுன்னணியிலேயே தனது பயணத்தைக் கொண்டு செல்லும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

மறுபுறத்தில் அரைமனதோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டுள்ளஅரசியல்கட்சிகளாகிய முன்னாள் ஆயுதக் குழுக்கள் ஜனநாயகவழியில்இன்னும்நீண்ட தூரம் பயணிக்கவும் செயற்படவும் வேண்டியிருக்கிறது என்பதையும் மக்களைத் திரட்டுவதற்கும் வசியப்படுத்துவதற்குமான அடிப்படைக் கட்டமைப்பு இயல்பைப் பெற அது இன்னமும் அர்ப்பணிப்போடு நீண்டதூரம் பயணிக்கவேண்டும் என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழ் அரசுக் கட்சி தொடர்பில் மற்றொரு முக்கிய விடயமும் இங்கு குறிப்பிடப்படவேண்டியது. தமிழ் அரசுக் கட்சிக்குள் இதுவரையில் தமிழ் பொது வேட்பாளருக்கு முழுமையான ஆதரவு வழங்கி கருத்துத் தெரிவித்துவந்த சிறீதரனின் நேற்றைய கருத்து சற்று வித்தியாசமாக இருந்தது.

உறுப்பினர்சிவஞானம்சிறீதரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாராவது சமஷ்டியை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் சுயாட்சியை ஏற்படுத்த இணங்குவதாகத் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுவார்களாக இருந்தால் அவரை ஆதரிப்பது தொடர்பாக தமிழ்அரசுக்கட்சிஆராயும்என்றார்.

ஓகஸ்ட் மாதம் 10 ,11 ஆம் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல்விஞ்ஞானத்தில்சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரைக்கும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் எவரும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரமாட்டார்கள்அதனாலேயேபொது வேட்பாளரைக்களமிறக்குகின்றோம் என்று கூறிவந்தவர்களுக்கு ஆதரவாகப் பேசி வந்தவர் சிறீதரன். இப்போது வேட்பாளர்கள் சமஷ்டியைமுன்வைத்தால்ஆதரவு குறித்துப்பரிசீலிக்கலாம் என்கிறார். தீர்வைத் தரமாட்டார்கள் என்று தீர்க்கமாக முடிவு செய்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவையும் எடுத்த பின்னர் வேட்பாளர்களின்தேர்தல்அறிக்கை குறித்து கவனம் செலுத்-துவது எந்தவகையில் நியாயமான செயற்பாடுஎன்பது தெரியவில்லை. இருந்தாலும்இந்தமாற்றம்ஏன்,இது உண்மையானதாஎன்பதெல்லாம் இன்னும் சில வாரங்களில் தெரியவந்துவிடும்.

விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையையே நடத்த முடியாதவர் என்று சுமந்திரன் குறிப்பிட்டமை தொடர்பாகவும் செய்தியாளர்கள் சிறீதரனிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு ஒரே கட்சியைச் சேர்ந்தவரின் கருத்துக்கு வியாக்கியானம் வழங்குவது சரியல்ல என்று அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமன்றி, இன்றைய காலச் சூழலில் அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்லவேண்டும். அதனை விட்டு ஒற்றுமையைக் குழப்பிப் பேசிக்கொண்டிருந்தால் அடிப்படை அரசியலைக் கொண்டு செல்வதில் பிரச்சினை உள்ளது என்றுவேறு உபதேசம் செய்தார். இந்தத் திடீர் ஞானம் எப்படி வந்தது என்றும் தெரியவில்லை. மலிந்தால்எல்லாம் ஒருநாள் சந்தைக்கு வரும்தானே! அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நினைவேந்தல் நிகழ்வுகள் நம்பிக்கை தருவதாக அமைய வேண்டும். அதைவிடுத்து வெறுமனே ஒப்பாரிகளுடன் மட்டும் முடிவடையக் கூடாது. 1977 ஆம் ஆண்டு பிரசார மேடைகளில்முஸ்லிம்காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த அஷ்ரப் உரையாற்றும்போது தமிழ் மக்களுக்கு அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்றுத் தராவிட்டாலும்தம்பிஅஷ்ரப்பெற்றுத் தருவேன் என்று முழங்கினார்.

இதேபோன்று மறைந்த தொண்டமான் சமஷ்டித் தீர்வை எட்டுவதில் ஓர் அங்கமாகச் செயற்பட்டவர் என்ற ரீதியில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்துச் செயற்படும்போதே எமது இலக்கை உறுதியாகக் கொண்டுசெல்ல முடியும்.

அஷ்ரப் மற்றும் அமிர்தலிங்கம் இடையே ஒற்றுமையும் தமிழின உணர்வும் எந்தளவு தூரம் இருவரிடமும் காணப்பட்டது என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை. தற்போது சிலர் ஒற்றுமை எனக் கூறுகின்றார்கள். தேர்தல் காலங்களில் வருகின்ற ஒற்றுமை பின்னர் பிரிந்து அரசியல் செய்வது. இதுதான் எங்களிடம் காணப்படுகின்ற ஒற்றுமை.

அஷ்ரப்,அமிர்தலிங்கம்போன்றவர்களின்ஒற்றுமைதமிழ்-முஸ்லிம் மக்களிடம்மீண்டும்ஏற்படுமானால் சமஷ்டிநோக்கியபயணம்இலகுவானதாகஅமையும். தமிழ்மக்களுக்கு சமஷ்டி கட்டமைப்புவேண்டும் என்று வீரப் பேச்சுக்கள் பேசுவதால் பயனேதும் கிட்டப் போவதில்லை. மூளையை உபயோகித்து எமது அரசியலைமேற்கொள்ளவேண்டும்.

இலங்கையில் 75 வீதமானவர்கள் சிங்களவர்கள். மீதமுள்ள 25 வீதமான தமிழ் பேசும்மக்களை ஒன்றிணைத்தால் நாடாளுமன்றத்தில் சுமார் 50 ஆசனங்களையாவது பெற்றிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. இருந்தால் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் பேசும் மக்கள் காணப்படுவார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் வாக்களிக்காவிட்டால் தெற்குக்கு அது பலமாக அமைந்துவிடும். இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் எமது வாக்குகள் பேரம் பேசும் சக்தியாக மாறும்.

அரசியல்தலைமைகள்சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கும்போது இந்தப் பேரம் பேசும் சக்தியின் மூலம் எமது மக்களுக்குப் பயன்கிடைக்கும். ஆகவே, சமஷ்டி தீர்வை நோக்கிய பயணத்தில் அதனை அடைவதற்கு சாம்பலில் இருந்து புறப்படும் பீனிக்ஸ் பறவை போல நாங்கள் எழவேண்டும் - என்றார்.

## பெரமுனவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனாக இருந்து, அன்று மக்கள் எதிர்கொண்டுவந்த கஷ்டங்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

தற்போது நாட்டை அபிவிருத்தி செய்து, எமது கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க இருக்கிறோம். ரணில்விக்ரமசிங்கமீண்டும் ஜனாதிபதியானால்மாத்திரமே இந்த வேலைத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

அத்துடன்இந்தமுறைஜனாதிபதி தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.அதனால் ரணில் விக்ரமசிங்கவை சுயாதீன வேட்பாளராக களமிறக்கி அனைத்து தரப்பினரின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பொது ஜன பெரமுனவின் தலைவர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அந்த கட்சியின் நூற்றுக்கு 80 வீதமானவர்கள் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கிறார்கள். அதேபோன்று தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும்ரணில்விக்ரமசிங்கவுக்கே இருக்கிறது. அதனால் வேறு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பின்னால் சென்று எந்த பயனும் இல்லை.

அதேநேரம் இந்தமுறை தேர்தலில் மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும். கடந்த காலங்களில் எடுத்த பிழையான தீர்மானங்கள் காரணமாக நாங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டோம். அந்தத் தவறை மீண்டும் செய்துவிடக்கூடாது. நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால், கட்டியெழுப்ப முடியாமல் போகும் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது. இந்த முறைரணில்விக்ரமசிங்கசுயாதீன வேட்பாளராக போட்டியிட்டாலும் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் நாங்கள் எமது சின்னத்தில் போட்டியிடுவோம். அதற்கான பலத்தை இந்த தேர்தலில் நாங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்த பின்னர், அவருக்கு ஆதரவளிக்க தற்போது மக்கள் வீதிக்கிறங்க ஆரம்பித்துள்ளனர். ரணில் விக்ரமசிங்கவெற்றிபெறுவதுஉறுதி என்தாலேயே அவர் போட்டியிட முன்வந்திருக்கிறார். நாங்கள் இன்னும் தேர்தல் பரப்புரையை ஆரம்பிப்பதற்கு முன்னரே கருத்துக்கணிப்புகளில் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களைவிட ரணில் விக்ரமசிங்க பல மடங்கு முன்னணியில்இருக்கிறார்என்றார்.

## மக்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என்றுமே முதலாம்திகதிகொட்டகலைக்குவந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோர் உறுதியளித்தனர். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தல்கூட மீளப்பெறப்பட்டுள்ளது. தேர்தலில் வாக்கு வேட்டை நடத்துவதற்காக தேர்தல் குண்டாகவே 1,700 ரூபா போடப்பட்டுள்ளது என அன்றே நான் சுட்டிக்காட்டி இருந்தேன். அது உண்மையாகியுள்ளது.

ஆளும்தரப்பும், கம்பனிகளும் இணைந்து இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளன. எமது மக்களை எந்நாளும் ஏமாற்ற முடியாது. எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள். சஜித் பிரேமதாச இது தொடர்பில் எம்மிடம் உறுதியளித்துள்ளார்.

மக்களை ஏமாற்றும் இந்த ஆளும்தரப்புக்கு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள். மக்கள் எமது பக்கமே உள்ளனர். தமிழ் முற்போக்கு கூட்டணி மக்களுக்கு துரோகம் இழைக்காது. எமது ஆட்சியில் காணி உரிமையும் நிச்சயம் பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்.

## முரண்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்ட போதிலும், தேர்தல் இடம்பெறவில்லை. அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலிலும் நடக்கக்கூடும். ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்த முடியுமா என்று ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்ததன் காரணமாகவே அவரது கட்சி சகாக்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுஅனைவரையும்குழப்பி வந்தனர்.

எவ்வாறிருப்பினும் நீதிமன்றம் அந்த அனைத்து முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளிவைத்தது. இப்போதும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தேர்தலுக்குபயம். அவர்தேர்தலுக்கு தயாராக இல்லை. ஆனால் எந்தவொரு காரணத்தைக் கூறியும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அவருக்குச் சட்டத்தில் இடமில்லை.

மறுபுறம் அவர் நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கும் ஜனாதிபதியாகவும் இருக்கின்றார். பொலிஸ் மா அதிபர் நியமனம் முறையாக இடம்பெறவில்லை என்பதுதற்போதுதெரியவந்துள்ளது. ஆனால் தனது தேவைக்காக அவரையே தொடர்ந்தும் பொலிஸ் மா அதிபராக வைத்திருப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

சி.டி.விக்கிரமரத்னவை 3 சந்தர்ப்பங்களில் பதில் பொலிஸ்மா அதிபராகநியமித்ததைமறந்துவிட்டு, தற்போதுபதில்பொலிஸ்மாஅதிபரை நியமிக்கமுடியாதுஎன்றுஜனாதிபதி கூறுகின்றார்.

தேர்தல் அலுவலகத்தைத் திறப்பதற்கு முன்னர் சென்று வரிசையில் காத்திருந்து முதன் முதலாக கட்டுப்பணத்தை செலுத்திதான் ஒரு வேட்பாளர் என்றும், எனவே தன்னால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என்றும் ரணில் தத்ரூபமாகத் தெரிவித்துள்ளார். இதுவே அவரது தந்திரமாகும். நாட்டில்தொடர்ச்சியாக முரண்பாடுகளை ஏற்படுத்தவே ஜனாதிபதி ரணில் முயற்சிக்கின்றார் என்றார்.

## சபாநயகரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிர்ச் செய்கை மேற்கொண்ட விவசாயிகளினா லும்தான் இன்று நாம் இந்த இடத்தில் இருக்கின்றோம். அந்த இரண்டு குழுக்களும்இல்லாவிட்டால், இன்று நாம் ஒரு நாடாக வெற்றிகரமாக முன்னேறியிருக்க முடியாது. இந்த நாட்டை நாம் பொறுப்பேற்றபோது நாட்டில் நிலவிய நிலை மையை அனைவரும் அறிவோம். நாங்கள் ஒரு கட்சிக்குச் சொந்தமான ஆளும்தரப்பாகச்செயற்படவில்லை. ஜனாதிபதி என்ற வகையில் அனைவரையும் ஒன்றிணைத்து புதிய ஆளும்தரப்பை உருவாக்கினேன். எனவே, இந்த ஆளும் தரப்பு சவால்களை ஏற்றுக்கொள்ளும் பலம்கொண்ட ஆளும்த ரப்பு.

உலக நாடுகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவியுடன் இந்த நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்த ஆரம்பித் தோம். நாட்டுக்கு டொலர்களை வழங்கிய புலம்பெயர் சமூகத்தை நாம் மறக்க முடியாது. அதற்காக அவர்களுக்குநன்றிதெரிவிக்கிறேன். இவ்வாறாக நாம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு வந்திருக்காவிட்டால் இன்று மக்களுக்கு இவ்வாறான சலுகைகள் கிடைத்திருக்காது. வெளிநாட்டில் இருந்து திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் ஆரம்பிக்கஉதவவேண்டியகடமை எங்களுக்குஉள்ளது. அன்றுநீங்கள் செய்த சேவையினால்தான் இன்று நாட்டு மக்களுக்கு இவ்வாறான நிவாரணங்களை வழங்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் பிணைமுறி உரிமையாளர்களுடன் கடன் மறுசீரமைப்புசெயல்முறைகுறித்து பேச்சு நடத்தியுள்ளோம். இதனால் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடுவதற்கானவாய்ப்புஇப்போது கிடைத்துள்ளது. இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் மூலம், ஜப்பான்ஆளும்தரப்பின்ஆதரவுடன் இந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்ட சகல திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிப்பதாகஜப்பான்அறிவித்தது.

திருகோணமலை துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட பெரும் திட்டங்களை நிறைவேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. மேலும், பலவலுசக்தித்திட்டங்களை செயல்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எனவே ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நாம் தற்போது தயாராக உள்ளோம்.

சீனாவையும்,ஆசியஅபிவிருத்தி வங்கியையும் தங்கள் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். இதன் மூலம், இந்த நாட்டில் நிர்மாணத் துறை பெரும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நாடென்ற வகையில் எம்மால் மீண்டும்எழுச்சிபெறமுடியாதுஎன்று சிலர் நினைத்தார்கள். தேர்தலை நடத்த முடியாதுபோகும் என்றனர். சர்வாதிகார நிலை உருவாகும் என்றனர். தற்போது தேர்தலை நடத்துகிறோம். இன்னும் சிலர் தேர்தலை நான் ஒத்திவைக்கப் போவதாக கூறினார்கள். தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக முதலில் சென்று கட்டுப்பணம் செலுத்தினேன்.

இந்த நெருக்கடி நிலையில் என்ன நடக்கும் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பொலிஸ்மா அதிபரை நியமித்த முறை தவறானது என்று கடந்த வாரம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவது அவசியமானது.

அதன்படி, சம்பிரதாய முறைப்படி மேல்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது. இதுஒன்றும்புதிய விடயமல்ல. ஆனால்அதேநேரத்தில், பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்படுவதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது. தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் பொலிஸ் மா அதிபர் தொடர்பில் உத்தரவு வழங்கப்பட்டதாக வெளிப்டையாக தோன்றலாம்.

இந்த விடயம் தொடர்பில் மறுநாள்எதிர்க்கட்சித்தலைவர்நாடாளுமன்றத்தில்கருத்துத்தெரிவித்தார். அந்தச் சமயம் சபாநாயகர் பிரசன்னமாகியிருக்கவில்லை. சபாநாயகர் வந்ததும் பிரதமர் அது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அரசமைப்புப் பேரவை நாடாளுமன்றத்திற்கே சொந்தமானது. எனவேஅரசமைப்புச்சபையின் உள்ளகசெயற்பாடுகளைநீதிமன்றம் ஆராய முடியாது எனவும் இந்த நியமனம்சட்டபூர்வமானது எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

நியமனம் சட்டவிரோதமானது என்றும் அதற்குத் தடை விதிக்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. மறுபுறம், இது சட்டபூர்வமானது என்று நாடாளுமன்றம் அறிவித்துள்ளது. செப்டம்பர் 21 தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பெரும் பிரச்சினையாக மாறலாம். எனவே, இது குறித்து மகாசங்கத்தினருடன்கலந்துரையாடினேன். தேர்தல் ஆணைக்குழுவுடனும் ஆராயப்பட்டது. இதற்குத்தீர்வுகாண வேண்டும் என அனைவரும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு ஜனாதிபதியால் தீர்வு தர முடியுமா?

## சங்கம் கேள்வி



நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும்காணாமல்ஆக்கப்பட்டஎம்உறவுகளுக்கான நீதியை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின்




சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப்போராட்டத்தில்ஈடுபட்டவர்கள்பல்வேறுவாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

இலங்கை அரசாங்கமும் சரி சர்வதேசமும் சரி, எங்களை ஒரு தடவையாவது திரும்பிப்பார்க்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாத முடிவில் வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.

ஆனால், எங்களை ஒருவருமே திரும்பி பார்ப்பதாக தெரியவில்லை. எனினும், எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வீதியில் இறங்கிப் போராடி வருகிறோம். ஆனால், நீதிக்காக ஏங்கி போராடி வருகின்ற அம்மாக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் சாட்சிகளும் மறைக்கப்பட்டுக்கொண்டு செல்கிறது. அதனையே இந்த அரசும் விரும்புகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை மாவட்ட ரீதியாக ஸ்தாபித்துள்ளனர். காணாமல்ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு 2 லட்சம் ரூபா கொடுப்பதாக கூறுகின்றனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இந்த பணத்தை வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையை கண்டறிவோம் எனக் கூறப்பட்டுள்ள போதும் இதுவரை உண்மையை கண்டறிய யாரும் முன்வரவில்லை. ஆனால் இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக்கொண்டு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே ஓ.எம்.பியின் நோக்கமாக உள்ளது.

எமது பிள்ளையின் உயிர் 2 லட்சம் பெறுமதி இல்லை. எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் 4 லட்சம் எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியினால் தீர்வு தர முடியுமா? நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் போன எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் உள்ளோம்.

ஆனால், இதுவரையில் எந்த ஜனாதிபதியும் எமக்கான பதிலை வழங்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளையும் உறவுகளையும் மீட்டுத் தருவாரா? அல்லது எமது உறவுகளுக்கு நீதி கிடைக்குமா? அல்லது இருக்கின்ற இடத்தை கண்டுபிடித்து தருவாரா? அந்த எதிர்பார்ப்புக்களுடனே இன்று வரை போராடி வருகிறோம்.

இலங்கை அரசியலில் நம்பிக்கை இல்லை. இவ்வாறான காரணங்களினாலேயே சர்வதேச விசாரணை கோரி போராட்டம் முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

## வவுனியாவிலிருந்து கடத்தப்பட்ட 15 மாடுகளுடன் மூன்று பேர் கைது



வவுனியா நெடுங்கேணி பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி கப் ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட 15 மாடுகளுடன் மூவர் வவுனியா விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமான வாகனத்தை வவுனியா ஹொரவப் பொத்தான வீதி 6 ஆம் கட்டை பகுதியில் வைத்து வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் அந்த வாகனத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப் பட்ட 15 மாடுகளை கைப்பற்றியுள்ளனர்.



அத்துடன் வாகனத்தில் பயணம் செய்த காட்டகஸ்கிரிய பகுதியை சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதுடன் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர், வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நீதிமன்றில் ஆஜர்படுத்துவதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

## பாய்வதற்காகவே நாம் பதுங்குகின்றோம்: பாயவேண்டிய நேரத்தில் நாம் பாய்வோம்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



மலையக மக்களின் உரிமை சார்விடயங்களில்தமிழ்முற்போக்கு கூட்டணி ஆக்கபூர்வமான நட வடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. பாய்வதற்காகவே நாம் பதுங்கிவருகிறோம். பாயவேண்டிய நேரத்தில் மக்களுக்காக நிச்சயம் பாய்வோம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலை வரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமானவீ. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மலையகபெருந்தோட்டதொழி லாளர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் மலையக மக்களுக்கான காணி உரிமை உள்ளிட்ட விடயங் களைவலியுறுத்திஹற்றனில்நடை பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில் -

கோட்டாபய ராஜபக்ஷவை நீதிமன்றம்விரட்டவில்லை. மக்கள் சக்தியே விரட்டியடித்தது. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்படாவிட்டால் மக்கள் அவருக்குபதிலைவழங்குவார்கள். ஜனாதிபதி யாரென்பதை மக்களே தீர்மானிப்பார்கள்.

மக்கள் சக்தியே முதன்மை யானது. பெருந்தோட்டத்தொழிலா ளர்களுக்கு சம்பள உயர்வு வழங் கப்படும்எனக்கூறிஜனாதிபதிஏமாற்றி யுள்ளார். ஆளுங்கட்சி பக்கம் உள்ளவர்களும்ஏமாற்றியுள்ளனர்.

இதனை ஏற்கமுடியாது. எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இப்பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும். எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். தமிழ் முற்போக்கு கூட்டணி பாய்வதற்காகவே பதுங்குகிறது. பாய வேண்டிய நேரத்தில் நிச்சயம் நாம் பாய்வோம். - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## போலி வேடத்தால் பயனில்லை

காவல் மா அதிபர் இல்லாமல் அரசுத் தலைவர் தேர்தல் நடக்காது என்பதால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு இணக்கத் தீர்வை உடனடியாக ஏற்படுத்தவேண்டும் என்றும் அதற்காக பிரதமர் நீதியரசரும் நாடாளுமன்ற சபாநாயகரும் பேசி ஒரு தீர்வைக் காணவேண்டும் என்றும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

அரசுத் தலைவர் தேர்தலை தடுக்க, நிறுத்த காவல் மா அதிபர் விவகாரத்தை ரணில் பயன்படுத்துகின்றார், இதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த முனைகின்றார் என்று எதிர்க்கட்சிகள் அரசுத் தலைவரைக் கடுமையாகச் சாடிவரும் நிலையில் அவரது இந்தக் கருத்து வந்துள்ளது. இந்த விவகாரத்தைத் தான் புதிய கோணத்தில் அணுகுகிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இது முழு அபத்தமாக இருக்கின்றது. காவல் மா அதிபரின் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை ஏற்கமுடியாது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தவர் தலைமை அமைச்சர் (பிரதமர்) தினேஸ் குணவர்த்தன. இந்த விவகாரத்தை முரண்பாட்டு நிலைக்கு எடுத்துச் சென்றது அந்த அறிவிப்புத்தான். அரசுத் தலைவருக்குத் தெரியாமல், அல்லது அவருடன் கலந்தாலோசிக்கப்படாமல் இந்த அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் சொல்ல முடியாது. இது தொடர்பில் ஆராய்வதற்காகத் தனியான அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டதன் பின்னர்தான் நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சரின் அறிவிப்பு வெளியானது.

அதற்கு இலங்கை முழுவதும் இருந்து கிளர்ந்த எதிர்வினைகளைத்தொடர்ந்துதற்போதுஅந்தவிவகாரத்திற்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத மாதிரி அரசுத் தலைவர் கருத்துரைத்திருப்பது வேடிக்கையானது. இந்த விவகாரம் ஏதோ உயர் நீதிமன்றத்திற்கும் சபாநாயகருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான முரண்பாடு என்கிற ரீதியிலும் அதனைத் தீர்த்து வைத்து அரசுத் தலைவர் தேர்தலை குறித்த திகதியில் நடத்துவதற்குத் தான் பாடுபடுவார் என்பதைப் போன்றும் ஒரு தோற்றப்பாட்டை அரசுத் தலைவர் ஏற்படுத்தப்பார்க்கின்றார். ஆனால் அதில் உண்மையில்லை என்பதை முழு இலங்கையுமே அறியும்.

”இனி நீதிமன்றம் செல்வதை நிறுத்திக்கொள்வோம். இப்போது நாம் தீர்வு காணவேண்டும். இந்த கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதா அல்லது செயலிழக்கச் செய்வதா என்பதை நாங்கள் முடிவு செய்யவேண்டும். இதை வெடிக்கவிட முடியாது. இதை பகுதிகளாக பிரித்து செயலிழக்கச் செய்யவேண்டும். அதற்குநாடாளுமன்றமும், உயர்நீதிமன்றமும் செயல்பட வேண்டும். எனவே, சபாநாயகர் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்” என்கிறார் அரசுத் தலைவர்.

”காலையில் சபாநாயகருடம் பேசினேன். தான் சட்டமா அதிபருக்குகடிதம்அனுப்பியுள்ளார்எனவும், பிரதமநீதியரசரிடம் பேச தயாராக உள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். இது குறித்து கலந்துரையாடுமாறு பிரதம நீதியரசருக்கு அறவிக்க இருக்கிறேன். இந்தப் பிரச்சினையை இந்த வாரத்திற்குள் தீர்க்கவேண்டும்.

அரசமைப்பின் 04ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர். நாட்டைப் பாதுகாக்காத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. நாட்டைப் பாதுகாக்க பொலிசார் தேவை. புலனாய்வு பிரிவு, விசேட அதிரடிப்படை செயல்படவேண்டும். இவையின்றேல் என்ன நடக்கும்?

சபாநாயகர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையை எப்படியாவது தீர்த்து வைத்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு செப்டெம்பர் 21ஆம் திகதி தேர்தலை நடத்த உகந்த வகையில் செயற்படவேண்டும்” என்கிறார் அவர். ஏதோ மிகப் பெரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தான் கடுமையாக முயற்சிக்கார் என்பதைப் போன்று அமைந்துள்ளது அவரது வெளிப்பாடு. ஆனால், அந்தப் பிரச்சினையை, முரண்பாட்டை, நீதித்துறையுடனான மோதல் போக்கை ஏற்படுத்தியவரே அவர்தான் என்பதை மக்கள் நன்கறிவார்கள். போலி வேடமிடுவதால் இப்போது ஆகப்போவது ஒன்றுமில்லை.



# பொலிவியா ராணுவ தளபதியின் அமெரிக்க ஆதரவுச் சதி தோல்வி

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பொலிவியாவில் அதிபர் லூயிஸ் ஆர்சேவின் ஆட்சியைக் கவிழ்க்கும் ராணுவத் தளபதியின் சதி முயற்சி கடந்த ஜூன் இறுதியில் முறியடிக்கப்பட்டது.

பொலிவியாவில் அமெரிக்க ஆதரவு பெற்ற ஜெனரல் ஜுவான் ஜோஸ் சூனிகாவின் முயற்சி படுதோல்வியில் முடிந்தது.

ஆளும் அதிபரது உறுதியான நடவடிக்கைகள், பொதுமக்களின் பாரிய ஆதரவுடன் தேசியக் கொடிகளை அசைத்தது, துருப்புக்களை பின்வாங்க வழிவகுத்தது.பொலிவியாவில் இராணுவ சதிப்புரட்சி முயற்சியின் தலைவரை ஜனாதிபதி மாளிகையின் கதவுகளில் நேருக்கு நேர் சந்தித்தார் பொலிவிய ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ்.

### பொலிவிய பொருளாதார நிலை:

பொலிவியாவின் தற்போதைய பொருளாதார நிலை மோசமாக உள்ளது. சர்வதேச நாணய நிதியம் (IMF) வளர்ச்சியை 1.6 சதவிகிதம் என்று கணித்துள்ளது.

பொருளாதாரச் சிக்கல்களை மேற்கோள்காட்டி, ‘ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும், நமது அரசியல் கைதிகளைவிடுவிக்கவும்‘இராணுவம்முயற்சிப்பதாக ஜுனிகா கூறினார்.

2005 ஆம் ஆண்டு முதல் அதிபராக மொரேல்ஸ் பதவியேற்றதில் இருந்து நாடு னிபுறீ கட்சியால் ஆளப்படுகிறது.

ஆர்ஸின் பதவிக்காலம் அரசியல் அமைதியின்மையையும் கண்டுள்ளது. அவரின் அரசாங்கத்தின் முடிவுகளுக்கு எதிராக வலதுசாரி சக்திகள் சாண்டா குரூஸ் போன்ற மாகாணங்களில் பல வேலை நிறுத்தங்களை நடத்தின.

### அரசுக்கு எதிரான புரட்சி:

கவசவாகனங்கள் அரசாங்க அரண்மனைக்குள் அடித்து நொறுக்கப்பட்டன, ஆனால் பொலிவியா, ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ் வலுவாக நின்றார், எதிர்க்கும் இராணுவத் தளபதியை விரைவாக மாற்றினார்.

பொலிவிய ஜனாதிபதி அரண்மனையிலிருந்து வெற்றிபெற்றார். ‘சகோதரர்களே, நான் உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். நீங்கள் நாடு முழுவதும் விரைவாக அணிதிரண்டிருக்கிறீர்கள்... பொலிவிய மக்களின் இரத்தத்தின் மூலம் நாங்கள் தெருக்களில் சம்பாதித்த ஜனநாயகத்தை யாராலும் பறிக்க முடியாது!‘

ஆட்சிக் கவிழ்ப்பு தலைவர கைது

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் தலைவரான ஜுவான் ஜோஸ் சூனிகா, அவரது சொந்தப் படையினரால் கைது செய்யப்பட்டார். ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர் பெருமளவு பொதுமக்கள்.

இறுதியில் பொலிவியா ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸை இலக்காகக் கொண்ட சதி முயற்சி படுதோல்வியில் முடிந்தது. அமெரிக்க ஆதரவு சதி தோல்வி அடைந்தமை இது முதல் முறையல்ல.

இதன் பின்னர் ராணுவ தலைமை தளபதியாக இருந்தஜுவான்ஜோஸ்ஸுனிகாகைதுசெய்யப்பட்டார். அவருக்கு உதவிய விமானப் படை, கடற்படை தளபதிகளின் பதவிகளும் பறிக்கப்பட்டன.

### ஆட்சி கவிழ்ப்பு சதி:

மத்தியதென் அமெரிக்கநாடானபொலிவியாவின் அதிபராககடந்த2006முதல்2019-ஆம்ஆண்டுவரை சோஷலிஸ இயக்கம் கட்சியைச் சேர்ந்த இவோ மொராலிஸ் ஆட்சி செலுத்திவந்தார். 2019-ஆம் ஆண்டு அதிபர் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்றார்.

எனினும், தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக்கூறிநாடுமுழுவதும் மிகத் தீவிர போராட்டங்கள் நடைபெற்றன. அதையடுத்து, இவோ மொராலிஸ் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

இந்த அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, ராணுவத்தின் உதவியுடன் சோஷியல் ஜனநாயக இயக்கம் கட்சியின் ஜெனீன் அனெஸ் தன்னை அதிபராக அறிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்று வந்த போராட்டங்களை அடக்குவதற்காக ராணுவம் மற்றும் போலீஸார் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகளும் ‘கிரிமினல்’ குற்றமாகாது என்ற அரசாணையை அவர் வெளியிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

பின்னர் 2020-ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் இவோ மொராலிஸ் கட்சியைச் சேர்ந்த லூயிஸ் ஆர்சே வெற்றி பெற்று புதிய அரசை அமைத்தார். கிளர்ச்யில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஜெனீன் அனெஸ் சிறையில் அடைக்கப்பட்டார்.

பொலிவியா ராணுவ தலைமை தளபதி ஜுவான் ஸுனிகா அளித்த பேட்டியொன்றில், முன்னாள் அதிபர் இவோ மொராலிஸுக்கு மிரட்டல் விடுத்தது பரபரப்பை ஏற்படுத்தியது.



### லூயிஸ் ஆர்சே பதவியில்:

அந்த பேட்டியில், வரும் 2025-இல் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் மொராலிஸ் மீண்டும் போட்டியிட்டால் அவரை பாதுகாப்புப் படைகள் கைது செய்யும் என்று ஸுனிகா எச்சரித்தார். அதையடுத்து, தளபதி ஸுனிகாவை பதவியிலிருந்து வெளியேற அதிபர் லூயிஸ் ஆர்சே உத்தரவிட்டார்.

இந்த நிலையில், பொலிவியாவின் ஆட்சித் தலைநகரான லா பாஸில், அதிபர் மாளிகை உள்ளிட்ட அரசுக் கட்டடங்கள் அமைந்துள்ள முரிலோ சதுக்கத்தை ராணுவம் கைப்பற்றியது. அந்தப் பகுதியை பீரங்கிகளுடன் ஏராளமான ராணுவ வீரர்கள் சுற்றிவளைத்தனர்.

அந்தப் பகுதிக்கு நேரடியாக வந்த ஜுவான் ஸுனிகா உள்ளூர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்கூறியதாவது: அரசின்மீதானஅதிருப்தியின் காரணமாக முப்படைகளின் தளபதிகளும் இங்கு வந்துள்ளோம்.

அமைச்சரவையிலும் ஆட்சியிலும் மாற்றம் வரும். முன்னாள் அதிபர் ஜெனீன் அனெஸ் உள்ளிட்ட அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். இந்த ஆட்சியின் கீழ் ஒரு சில அதிகார வர்க்கத்தினர் கைகளில் நாடு செல்வதை இனியும் அனுமதிக்க முடியாது என்று ஸுனிகா கூறினார்.

### ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக போராட்டம்:

இதற்கிடையே, தனது அமைச்சர்களுடன் தொலைக்காட்சியில் உரையாற்றிய அதிபர் ஆர்சே, ஆட்சிக்கவிழ்ப்புக்குஎதிராகபோராட்டத்தைநடத்துமாறு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பொலிவியா ராணுவ தளபதியின் அமெரிக்க ஆதரவுச் சதி தோல்வி



4ம் பக்க தொடர்ச்சி..........

பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார். ஜனநாயகத்தையும் பொதுமக்களின் உயிரையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றுணை வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அதையடுத்து, முரிலோ சதுக்கத்துக்குச் செல்லும் சாலைகளில் போராட்டக்காரர்கள் குவிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆட்சிக் கவிழ்ப்பை ராணுவம் கைவிடும் வரை காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்வதாக தொழிற்சங்கங்கள் அறிவித்தன.

இதனால் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி பிசுபிசுத்த நிலையில், ராணுவம், விமானப் படை, கடற்படைக்கு புதிய தளபதிகளை அதிபர் ஆர்சே அறிவித்தார். புதிய தளபதிகள் மூவரும், தங்களது படையினர் அரசு வளாகங்களிலிருந்து வெளியேறி முகாம்களுக்குத் திரும்ப உத்தரவிட்டனர். அந்த உத்தரவை ஏற்று ராணுவத்தினரும் முரிலோ சதுக்கத்திலிருந்து வெளியேறினர்.

அதையடுத்து, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி முடிவுக்கு வந்தது. பதவி நீக்கம் செய்யப்பட்ட தளபதி ஜுவான் ஜோஸ் ஸுனிகாவை போலீஸார் கைது செய்தனர். இந்த சதிச்செயலில் பங்கேற்ற அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு அமெரிக்க பிராந்திய நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

### பொலிவிய ஜனநாயக வெற்றி:

சோசலிசத்திற்கான இடதுசாரி இயக்கம் (னிபுறீ) கட்சியின் ஜனாதிபதி ஆர்ஸ் தோல்வியுற்ற ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியை பாராட்டினார், இது பொலிவியாவின் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்றும் கூறினார்.

தோல்வியடைந்தஆட்சிக்கவிழ்ப்புமுயற்சியைஎதிர்கொண்ட மக்களுக்கு பொலிவிய ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். பொலிவிய மக்களுக்கு மிக்க நன்றி. வாழ்க ஜனநாயகம், என்று லத்தீன் அமெரிக்க தேசத்தில் இராணுவத்தின் மீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திய பிறகு அவர் கூறினார்.

### லூயிஸ் ஆர்ஸ் யார் :

60 வயதான ஆர்ஸ் நவம்பர் 2020 இல் தென் அமெரிக்க நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் ஒரு பொருளாதார நிபுணரான ஆர்ஸ், 2005 இல் மொரேல்ஸின் முதல் ஜனாதிபதி முயற்சிக்கான பொருளாதாரத் திட்டத்தை வடிவமைத்தார். 2006 இல், மொரேல்ஸ் ஆர்ஸை பொருளாதார அமைச்சராக நியமித்தார்.

சமீபத்திய ஆண்டுகளில், ஆர்ஸ் மற்றும் மோரல்ஸ் இடையே பதட்டங்கள் உருவாகி வருகின்றன, அவர்கள் ஒவ்வொருவரும் மேலாதிக்க னிபுறீ அரசியல் கட்சியின் ஒரு பிரிவை வழிநடத்துகிறார்கள். ஆர்ஸின் வழிகாட்டியாக இருந்த மொரேல்ஸ், 2025 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய ஜனாதிபதியை சவால் செய்வேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் அரசியலமைப்பு நீதிமன்றம் மொரேல்ஸ் போட்டியிடுவதைத் தடுக்கிறது. உண்மையிலே ஆர்ஸின் 2020 ஜனாதிபதித் தேர்தல் பொலிவியாவிற்கு ஸ்திரத்தன்மை திரும்புவதைக் குறித்தது.

இருப்பினும், அவர் அமெரிக்க டாலர் பற்றாக்குறையை சமாளிக்க போராடினார் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கத்தின் கொந்தளிப்பு தொடர்ந்து வெளிப்பட்டது.

### பொலிவிய ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி ?

ஆர்ஸின் அரசாங்கம் நாட்டை 'வறுமையாக்குகிறது' என்று இராணுவத் தளபதி ஜுனிகா கூறினார். 12 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க ஆர்ஸ் போராடி வருகிறார்.

அத்துடன் அமெரிக்க டாலர் தட்டுப்பாடு, வெளிநாட்டு இருப்புக்கள் குறைந்து, பொலிவியாவின் நிதிப்பற்றாக்குறை அவரது கண்காணிப்பில் அதிகரித்துள்ளது.

கனிம ஏற்றுமதியை நம்பியிருக்கும் ஒரு நாட்டில் குறைந்த பொருட்களின் விலைகள் அதன் நிதியையும் பாதித்துள்ளன. 2014 இல் பொருட்களின் விலை ஏற்றம், பேட்டரிகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் லித்தியம் உட்பட மிகப்பெரிய கனிம இருப்புக்களுடன் நாட்டில் வருவாயை அதிகரிக்க உதவியது.

இருப்பினும், COVID-19 தொற்றுநோய்களின் போது, அதன் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நாடு பல தசாப்தங்களாக அரசியல் ஸ்திரமின்மை, உயர் வருமான சமத்துவமின்மை மற்றும் தீவிர வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பழங்குடி சமூகம் மத்தியில். மொரேல்ஸின் 14 ஆண்டுகால ஜனாதிபதி காலத்தில், நாடு அரசியல் ஸ்திரத்தன்மையைக் கண்டது மற்றும் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலானமக்கள்வறுமையிலிருந்துமீட்கப்பட்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளுக்கு





(எம்.ஏ.றமீஸ்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டிகளில் மாகாண மட்டப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்கள் 21 தங்கப் பதக்கங்கள் மற்றும் ஓர் வெள்ளிப் பதக்கம் அடங்கலாக 22 பதக்கங்களை தனதாக்கிக் கொண்டனர்.

கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டிகளின் மாகாண மட்ட போட்டிகள் அண்மையில் காத்தான்குடி முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது திறமை காட்டி வெற்றி பெற்ற இப்பாடசாலை மாணவர்கள் பாடசாலை வளாகத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையிலான வழிகாட்டலின் கீழ் இப்பாடசாலையின் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சிறந்த அடைவுகளையும் பல்வேறான முன்னேற்றங்களையும் பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. இப்பாடசாலையின் முன்னேற்றகரமான இச்செயற்பாடுகளை பல்தரப்பட்டோர் பாராட்டியும் வருகின்றனர்.

இம்முறை நடைபெற்ற போட்டிகளில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் நான்கு போட்டி நிகழ்ச்சிகளில்; முதலிடம் பெற்றதன் மூலமாக 21 தங்கப் பதக்கங்களையும், ஒரு மாணவர் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வாண்டு நடைபெற்ற மாகாண மட்ட கலாசாரப் போட்டிகளில் அக்கரைப்பற்று கல்வி வலயம் சார்பாக, அத்கமான நிகழ்வுகளில் தேசிய மட்டப் போட்டிகளுக்காகச் செல்லும் பாடசாலை எனும் பெயரையும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது.

இம்முறை நடைபெற்ற மாகாண மட்ட கலாசாரப் போட்டிகளின்போது இப்பாடசாலை சார்பாக போட்டியிட்ட றபான் நடனம், கசீதா போட்டி, அரபு எழுத்தணிக்கலை மற்றும் அரபு தமிழ் இலக்கியம் ஆகிய போட்டிகளில் பங்கு கொண்ட மாணவர்களே முதலிடம் பெற்று தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துக் கொண்டனர். இடை நிலைப் பிரிவு அதான் ஒலித்தல் போட்டியில் ஒரு மாணவர் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும் சுவீகரித்துக் கொண்டார்.

இப்போட்டியில் பிரிவு மூன்று தனி நிகழ்ச்சியான அறபுத் தமிழ் இலக்கியம் ஒப்புவித்தல் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய பி.எல்.பாத்திமா வொசிக்கா என்ற மாணவி முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை, பிரிவு- 03, கஸீதா குழுப் போட்டியில் பங்கு பற்றிய ஆர்.பாத்திமா றஷா, என்.பாத்திமா நுஹா, ஆர்.நுஹா, ஏ.ஆர்.பாத்திமா இஸ்ராக், எஸ்.பாத்திமா நொர்சின், எச்.சாரா பதூல் ஆகிய மாணவிகள் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டியில், பிரிவு-03, அரபு எழுத்தணி கலை தனி நிகழ்ச்சியில் ஆர்.பாத்திமா சிப்னா என்ற மாணவி முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார். இதுதவிர, இக்கலாசாரப் போட்டியில் பிரிவு-02, தனி நிகழ்ச்சி அதான் கூறுதல் போட்டியில் எம்.எம்.றசிம் என்ற மாணவர் இரண்டாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, றபான் நடனப் போட்டிக்காக பங்கு பற்றிய எல்.முஹன்னத், எச்.சிமாஸ் அஹமட், ஆர்.எம்.றுஸ்த், எம்.எஸ்.பர்வீஸ் முசாரி, ஏ.எச்.எம்.தஸ்னீம், ஏ.கே.எம்.சறாப், ஏ.ஆர்.அத்னான் அஹமட், எம்.பி.உறூஜ் அஹமட், என்.சுஆத் அஹமட், ஆர்.எம்.பிலால், ஜே.அஸ்ஜத் அஹமட், எப்.மிசால் அஹமட் ஆகிய மாணவர்களும் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

இதற்கிணங்க இம்மாணவர்களை போட்டி நிகழ்வுகளுக்கு தயார் செய்வதற்காக பல்வேறு வழிகாட்டல்களை வழங்கி அதற்கென பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த அதிபர் ஏ.எச்.பௌஸ் மற்றும்; மாணவர்களை பயிற்றுவிப்பதில் பங்களிப்பினை நல்கிய பிரதி அதிபர் ஏ.எல்.நஸீபா, இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் லெப்டினன் என்.எம். முகம்மட் ஸாலிஹ், பிரதி அதிபர் எம்.ஏ.சலாகுதீன் மற்றும் ஆசிரியர்களான ஏ.எல்.எம்.இல்யாஸ், எம்.என்.எம்.ஜுனைட், எச்.எம்.சிப்னாஸ், என்.எம்.நிஷாத், ஐ.எப்.சிப்கா ஆகியோருக்கும், பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கும் பாடசாலைச் சமூகத்தினர் தமது நன்றியினையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கின்றனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## சபாநயகரும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்கள். இன்றேல் இதனால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

இந்தப் பிரச்சினையை நான் வேறு கோணத்தில் பார்க்கிறேன். பொலிஸ் மா அதிபரின் நியமனத்தையோ, அரசமைப்பு பேரவை கூட்டத்தையோ நான் பார்க்கவில்லை. தேர்தல் என்பது மக்களின்இறையாண்மையின்ஒரு பகுதி என்று அரசியல் சாசனத்தின் 4ஆவது பிரிவு கூறுகிறது. அந்த மக்களின்இறையாண்மையைநாம் பாதுகாக்கவேண்டும். அரசமைப்பின் 106 ஆவது பிரிவின்படி, நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜூலை 17 முதல் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைத்தது. இந்தத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு முழு ஆதரவை வழங்குவது நம் அனைவரின் கடமையாகும். இந்த மேடையில் எனது புகைப்படத்தை பயன்படுத்த முடியுமா என தேர்தல் ஆணையாளரிடம் மனுஷ நாணயக்கார வினவியிருந்தார். அதை நீக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அதுஎனக்குப்பிரச்சினை இல்லை. இவ்வாறானவிடயங்களை பேசித் தீர்க்கவேண்டும். ஆனால் நாங்கள் இப்படிச்செயல்படும்போது, தேர்தல் ஆணைக்குழுவிடம் இதுபற்றி விசாரிக்க வேண்டிய கடமை உயர் நீதிமன்றத்துக்கும் இருந்தது.

அரசமைப்பின் 106 ஆவது பிரிவின்கீழ், பொலிஸ்அதிகாரிகளின் சேவையை பொலிஸ் மா அதிபரின் ஊடாகத்தான்தேர்தல்ஆணைக்குழு பெறமுடியும். பொலிஸ் மா அதிபர் இல்லை என்றால், அந்த அதிகாரிகளை எப்பட்டி பெறமுடியும்? தேவையானஎண்ணிக்கையிலான பொலிஸ்அதிகாரிகளை இந்த வாரம் கோர வேண்டும். பின்னர் கேட்டுப் பெற முடியாது. அந்த நிலையில் தேர்தலை நடத்த முடியாது. எனவே இது மிகவும் முக்கியமான விடயமாகும். எனவே, இது குறித்து தேர்தல்ஆணைக்குழுவிடம்ஆராய வேண்டியது உயர் நீதிமன்றத்தின் முதல் கடமையாகும்.

இந்த விவகாரங்கள் குறித்து தேர்தல்ஆணைக்குழுவிடம்கேட்டு முடிவெடுப்பதே நாடாளுமன்றத்தின் முதன்மைக் கடமையாக இருந்தது. அதைச் செய்யாததால் தான் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தேர்தலை ஒத்தி வைப்பதை நான் விரும்பவில்லை. செப்டம்பர் 21ஆம் திகதிக்கு பின்னர் வேறு நாளில் தேர்தலை நடத்த நான் தயாராக இல்லை. இந்த தேர்தலை எப்படியும் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். நீங்கள்விரும்பியவருக்கு வாக்களியுங்கள். அதுஒருபிரச்சினை இல்லை. உங்களுக்கு அந்த உரிமை உள்ளது.

இனி நீதிமன்றம் செல்வதை நிறுத்திக்கொள்வோம். இப்போது நாம் தீர்வு காணவேண்டும். இந்த கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதா அல்லது செயலிழக்கச் செய்வதா என்பதை நாங்கள் முடிவு செய்யவேண்டும். இதைவெடிக்கவிட முடியாது. இதை பகுதிகளாக பிரித்து செயலிழக்கச் செய்ய வேண்டும். அதற்கு நாடாளுமன்றமும், உயர் நீதிமன்றமும்செயல்படவேண்டும். எனவே, சபாநாயகர் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலையில் சபாநாயகருடம் பேசினேன். தான்சட்டமாஅதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனவும், பிரதம நீதியரசரிடம் பேச தயாராக உள்ளார்எனவும்அவர்தெரிவித்தார். இது குறித்து கலந்துரையாடுமாறு பிரதம நீதியரசருக்கு அறவிக்க இருக்கிறேன். இந்தப்பிரச்சினையை இந்தவாரத்திற்குள்தீர்க்கவேண்டும்.

அரசமைப்பின் 04ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர். நாட்டைப் பாதுகாக்காத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம்தண்டனைவிதித்துள்ளது. நாட்டைப் பாதுகாக்க பொலிசார் தேவை. புலனாய்வு பிரிவு, விசேட அதிரடிப்படை செயல்படவேண்டும். இவையின்றேல் என்ன நடக்கும்?

சபாநாயகர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் கலந்துரையாடி இந்தப்பிரச்சினையைஎப்படியாவது தீர்த்து வைத்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு செப்டெம்பர் 21ஆம் திகதி தேர்தலை நடத்த உகந்த வகையில் செயற்பட வேண்டும் என்றார்.

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் குறித்த இறுதி முடிவு வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தொழிலதிபர் தம்மிக்க பெரேரா களமிறக்கப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின்உறுப்பினர்களில்ஒரு தரப்பினர் குறிப்பிடுகின்ற நிலையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் அல்லது அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

## தமிழ் பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர்விடுதியில்நடைபெற்றது. பொதுக் கட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. அதில் முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இச் சந்திப்பு தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதியும் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினருமான அரசியல்பத்திஎழுத்தாளர்நிலாந்தன் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ளதமிழ்த்தேசிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் இன்று நடைபெற்றது.

இதன்போதுபொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப் பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்.

அதாவது இந்த பொதுக் கட்ட மைப்பிற்கு கீழ் வரக்கூடிய உப கட்டமைப்புக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. குறிப்பாக வேட்பாளர் யார் என்பதை தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையை தீர்மானிப் பதற்கும், கட்சிச் சின்னத்தைத் தீர்மானிப்பதற்குமானஉபகட்டமைப் புக்கள் நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகட்ட மைப்புக்கள்உருவாக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் உரிய கட்டமைப்புக்களால்உரியநேரத்தில் அந்தந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றார்.

## தெரிவத்தாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடும் பொலிஸாரின் எண் ணிக்கை மற்றும்செலவுகள்தொடர் பான விவரங்களை பொலிஸ் திணைக்களம்வழங்கியுள்ளது.அரச அச்சகத் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற் றின்செயற்பாடுகளுக்குதேவையான நிதியைவிடுவிக்குமாறுதிறைசேரிக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

வேட்பு மனுக்கள் எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டத்துக்கு அமைய பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்துஅரசியல்கட்சிகளின்வேட்பா ளர்கள் அல்லது செயலாளர்கள் மற்றும்சுயாதீனவேட்பாளர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

ஊடகபரப்புரைகுறித்துஊடகநிறு வனங்களின்பிரதானிகளுடன்கலந்து ரையாடவுள்ளோம். சகலவேட்பாளர் களுக்கும் நியாயமான வகையில் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

## பொருளாதார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின்போது நாட்டு மக்களின் உயிரா அல்லது பொருளாதாரமா என்ற தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. பொருளாதாரத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம் மக்களின் உயிரை பாதுகாக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்கமைய கொவிட் பெருந்தொற்றில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்தோம்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின்பின்னரானபொருளாதார நெருக்கடி பெரும் அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் பெற்ற கடன்களினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று ஒருதரப்பினர் இன்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

மஹிந்தராஜபக்சவின்ஆட்சியில் பெற்றுக்கொண்ட கடன்கள் சமூக கட்டமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. எமது அபிவிருத்தி செயற்திட்டங்களையே தனியார் மயப்படுத்த தற்போதைய ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி நாயகர்களே பொறுப்புக் கூறவேண்டும். 2015 ஆம் ஆண்டு முதல்2019ஆம்ஆண்டுவரையான காலப்பகுதியில்எந்தபுதியஅபிவிருத்தி திட்டங்களும் அவர்களால் அறிமுகப்படுத்தப்படவில்லை.மாறாக எமதுஅபிவிருத்திகருத்திட்டங்கள்கூட இடைநிறுத்தப்பட்டன. ஆகவே பொருளாதார கொள்கையில் இரு மாறுப்பட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இவ்வாரம் வெளியிடுவோம். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்க போவதில்லை. கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான தீர்மானத்தை எடுப்போம் என்றார்.

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கலந்துரையாடியதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றதை ஆரம்பத்தில் இருந்து சுட்டிக்காட்டினோம். அரசமைப்புக்கு முரணாக பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்என்றசந்தேகம் காணப்படுவதால் தான் அவருக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்றசிறப்புரிமைக்குள் இருந்துகொண்டு உயர் நீதிமன்றத் தின் தீர்ப்பை கேள்விக்குள்ளாக்க முடியாது. கொழும்புரோயல்கல்லூரி யின் பழைய மாணவர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர்தினேஷ்குணவர்தன ஆகிய இருவரும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கப் போவதில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் பணிகளை முன்னெடுக்க பொலிஸ் மா அதிபர் பதவி இன்றியமையாதது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொலிஸ்மாஅதிபருக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்கும்போது அரசமைப்புக்கு அமைய பதில் பொலிஸ்மாஅதிபரைநியமிக்குமாறு உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படுவதை விடுத்து ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கும், நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க போவதில்லை என்று நாட்டின் முதல் மற்றும் இரண்டாம் பிரஜைகளான ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் குறிப்பிடுவது தவறானதொரு எடுத்துக்காட்டு என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

## 500 கிராம் கேரளக் கஞ்சாவுடன் திருமலையில் பெண் கைது

திருகோணமலை தம்பலகாமம் பிரிவுக்குட்பட்ட 99ஆம் கொலனி பிரதேசத்தில் 500 கிராம் கேரள கஞ்சாவுடன் பெண்ணொருவர் வெள்ளிக்கிழமை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் ஹைரியா நகர் புல்மோட்டை - 1 என்ற பகுதியில் வசிக்கும் 44 வயது பெண் ஆவார்.

விற்பனை செய்வதற்காக 500 கிராம் கேரள கஞ்சாவை தம் வசம் வைத்திருந்தபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என தம்பலகாமம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த வெள்ளிக்கிழமை கந்தளாய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து, குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## சுங்க அதிகாரி உயிரிழப்பு பொலிஸார் விசாரணைகள்

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் சுங்க அதிகாரி ஒருவர் ஓய்வறையில் திடீரென உயிரிழந்துள்ளார் என மத்தள பொலிஸார் தெரிவித்தனர்.

ருக்மலே, பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சுங்க அதிகாரி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் உயிரிழந்ததற்கான காரணத்தைக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மத்தள பொலிஸார் தெரிவித்தனர். (05)

## அதிகஷ்டப் பிரதேச மாணவருக்கு றோட்டரி கழகத்தால் கற்றல் உதவி





(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கல்முனை றோட்டரிக் கழகத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் வித்தியாலயம், றொட்டை அ.த.க.பாடசாலை, கோளாவில் பெருநாவலர் வித்தியாலயம், சம்மாந்துறை இஸ்மாயில் வித்தியாலயம், பாணமை அ.த.க.பாடசாலை, சவளக்கடை கணேசா வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளின் 475 மாணவர்களுக்கு 2500 அப்பியாசக் கொப்பிகள் கல்முனை றொட்டரிக்கழகத்தால் வழங்கப்பட்டன.

கல்முனை றோட்டரி கழகத்தின் 2024/25 வருடத்திற்கான புதிய தலைவர் பொறியியலாளர் றொட்டரியன் என். றதீசன் தலைமையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் செயலாளர் மு. சிவபாதசுந்தரம் அங்கத்தவர்கள் மு. அமிர்தசங்கர், க. வினோத் மற்றும் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதற்கான நிதியை ஆஸ்ரேலிய றோட்டரிக்கழகம் கன்பேரா வெஸ்டர்ன் கிறீக் வழங்கியுள்ளது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# 3 பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்து விவரங்களை பகிரங்கப்படுத்துக

## ஐக்கிய நூற்றாண்டு முன்னணி கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும் அத்துடன் பொருளாதார மீட்சிக்கான சிறந்த கொள்கைத் திட்டங்களையும் முன்னிலைப்படுத்த வேண்டும்.நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என ஐக்கிய நூற்றாண்டு முன்னணியின் தலைவர் பிரசாத் தி விஸர் தெரிவித்தார்.

கொழும்பில்உள்ளஐக்கியநூற்றாண்டுமுன்னணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையிலும் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படுமா அல்லது கடந்த காலங்களை போன்று தேர்தல்கள் காணாமலாக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேர்தலை பிற்போட்டால் அது ஜனாதிபதியின் அரசியல் புகழுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இருந்து ஜனாதிபதி நாட்டை பாதுகாத்தார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் திட்டங்களையும்பொருளாதாரக்கொள்கைகளையும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஜனாதிபதித் தேர்தலை மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் மூவரும் தங்களின் சொத்து விவரங்களைமக்களுக்குபகிரங்கப்படுத்தவேண்டும். அத்துடன் ஒருவரின் கருத்தை பிறிதொருவர் விமர்சித்துக்கொண்டிருக்காமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சிறந்த கொள்கைகளை முன்வைக்கவேண்டும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டு மக்கள் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு அரசியல் ரீதியிலான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.அரசியல்வாதிகள் நாட்டு மக்களை தவறான வழிநடத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் தமது வாக்குரிமையை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். – என்றார். (05)

# தம்பலகாமத்துக்கு திருமலை மாவட்ட செயலர் அபிவிருத்தி மீளாய்வு தொடர்பாக கள விஜயம்







(ஹஸ்பர் ஏ.எச்)


திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள அபிவிருத்தி திட்டம் மீளாய்வு தொடர்பான கண்காணிப்பு விஜயம் ஒன்றை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி மேற்கொண்டார்.

குறித்த அபிவிருத்தி மீளாய்வு மற்றும் கலந்துரையாடல் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மூலமான மதிப்பீடு மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இதன் போது வெளிக்கள கண்காணிப்பு விஜயம் ஒன்றையும் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கண்காணிப்பு விஜயமானது குறித்த பிரதேச செயலகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

# வன்னேரி, அய்யனார்புரத்தில் முதலைகளால் மக்கள் அச்சம்

கிளிநொச்சி அக்கராயான் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட வன்னேரி குளம் அய்யனார்புரம் பகுதியில் உள்ள கிராமத்தில் தற்பொழுது சிலதினங்களாக முதலைகள் மக்கள் குடியிருப்பு பகுதியில் புகுந்து மக்களில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதுடன் அன்றைய தினமும் 25.07.2024 மூன்று குரங்குகளை முதலை பிடித்து உண்டதாகவும் இதன் காரணமாக



இப்பகுதியில் இருக்கும் மக்கள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் தமது நாளாந்த கடமையை செய்ய முடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாக அன்றைய தினம் 27.07.2024 கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தகவல் அமைப்பாக அன்று மாலை சம்பவ இடத்துக்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் முதலையை பாதுகாப்பாக பிடித்து அப்பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். (05-113)

# சின்ன விசாரை வயல் கண்டத்தில் அறுவடை விழா ஆரம்பமாகியுள்ளது



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சின்னவிசாரைஇடைக்கண்டத்தின் அறுவடை விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சின்ன விசாரை வயல் கண்டத்தில் உத்தியோகபூர்வமாக



ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சின்ன விசாரை இடைக் கண்ட குழுவின் தலைவர் அப்துல் மஜீத் ஜே.பி. தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பில்கஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பில் கஜனுக்கு சின்ன விசாரை இடைக் கண்ட குழுதலைவர் அப்துல்மஜீத் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இந் நிகழ்வில், நீர்ப் பாசனத்திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் முகம்மது பைசல், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபையின் கணக்குப் பரிசோதகர் பொறியியலாளர் என்.எம். நழீம், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபையின் செயலாளர் அப்துல்வாசித், பொருளாளர் எம்.எச்.எம். அர்சாத், வட்டவிதானை எம்.ஏ. அமீர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், விவசாயிகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதை வரவேற்கிறோம்

## அரச பொது ஊழியர்கள் சங்கம் தெரிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

எதிர்கால ஜனாதிபதி தேர்தல் என்பது மாபெரும் சக்திகளில் ஒன்று.எனவே இத்தேர்தலில் வட கிழக்கில் பொது வேட்பாளர் நியமிக்கப்படுவதைவரவேற்கின்றோம்.தமிழ்மக்களுக்கு மட்டும் இவ்வாறான பிரச்சினை இருக்கவில்லை .முஸ்லீம் மக்களுக்கும் இருக்கின்றது.வட கிழக்கில் இரு சமூகத்தினரும் இன்று பாதிக்கப்பட்டு தான் இருக்கின்றார்கள்.எனவே ஓர் அணியில் இருந்து நாங்கள் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்பதை வரவேற்கின்றோம் என அகில இலங்கை அரசாங்க பொதுஊழியர்கள்சங்கத்தின்தலைவர்எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

வட கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் மூன்று தசாப்த காலமாக தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.தற்போது பொது வேட்பாளர் என கூறுப்படுவதை நாங்கள் வரவேற்கின்றோம்.ஏனெனில் எமது மக்களின் வாக்கு பலத்தால் நாங்கள் பேரம் பேசும் சக்தியாக மாறலாம்.

எமது நாடு சுதந்திரம் அடைந்து 72 வருடங்களில் தேசிய கட்சிகளுக்கு ஆதரவு வழங்கி வந்திருந்த போதிலும் அக்கட்சிகள் யாவும் எம்மை நடு வீதியில் விட்டுச்சென்றதே வரலாறு.குறிப்பாக மாகாண சபை அதிகாரத்தை கூட எம்மால் பெற முடியாத நிலைமை உள்ளது.

எனவே எதிர்கால ஜனாதிபதி தேர்தல் என்பது மாபெரும் சக்திகளில்ஒன்று.எனவே, இத்தேர்தலில்வடக்குகிழக்கில்பொது வேட்பாளர் நியமிக்கப்படுவதை வரவேற்கின்றோம்.தமிழ் மக்களுக்கு மட்டும் இவ்வாறான பிரச்சினை இருக்கவில்லை .முஸ்லீம் மக்களுக்கும் இருக்கின்றது. வட கிழக்கில் இரு சமூகத்தினரும் இன்று பாதிக்கப்பட்டு தான் இருக்கின்றார்கள்.

எனவே, ஓர் அணியில் இருந்து நாங்கள் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்பதை வரவேற்கின்றோம். - என்றார். (05)

# முப்படை அதிகாரிகள், ஊடகவியலாளர் காத்தான்குடியில் கௌரவிப்பு நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

எக்ஸத் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில், இலங்கையின் முப்படைகளில் சேவையற்றி ஓய்வு நிலையில் உள்ளவர்களுக்கும், தற்போது சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களும் அதனோடு இணைந்ததாகஇரண்டுசர்வதேசஊடகவியலாளர்கள் மற்றும் நான்கு சிவில் செயற்பாட்டாளர்களுக்கும் கௌரவம் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை 3.30 மணிக்கு காத்தாஜுன்குடி அல்மனார் அறிவியற் கல்லூரி அப்துல் ஜவாத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எக்ஸத் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜெ.எல்.எம்.ஷாஜஹான்தலைமையில்இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான கௌரவ சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கௌரவ அதிதிகளாக

சிரேஸ்டபேராசிரியர்கலாநிதிறமீஸ்அப்துல்லாஹ் ,தென்கிழக்கு பல்கலைக்கழகம் பேராசிரியர் எம்.எம். பாஸில், பேராசிரியர் கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயில், பேராசிரியர் கலாநிதி ஐ.எல்.எம்.மாஹிர் ஆகியோரும், விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ரி. அன்சார் நளீமி, கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ் பல்வேறு துறைகளை சார்ந்தவர்களும் இன்னும் பல கல்விமான்களும், ஊர்த்தலைவர்களும் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(05)

# ஊடக பயிற்சிநெறியின் இறுதி அமர்வு



(கே எ ஹமீட்)

ஆர் ஜே மீடியா ஊடக வலையமப்பு மற்றும் எழுத்துச்சரம் சஞ்சிகை நாடளாவியரீதியில்வழங்கும்இரண்டு மாதகால ஊடகப் பயிற்சி நெறி பத்து அமர்வுகளாகசிறந்தவளவாளர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றது.

இதில் செய்தி வாசிப்பு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு, சமூக ஊடகங்களை உருவாக்குதலும் கையாளும் முறை, புகைப்படம் மற்றும் காணொளி செம்மையாக்கம், மற்றும் மேடை அறிவிப்பு, ஏனைய ஊடகங்களை உள்ளடக்கிய கற்றல் பயிற்சி போன்றன கற்பிக்கப்படுகிறது.

இதில் நாடளாவிய ரீதியில் பலரும் கலந்து கொண்டனர். இக் கற்கை நெறியின் இறுதியில் வழங்கப்படும் வானொலிநேரடிப்பயிற்சிமற்றும்கலை நிகழ்ச்சி இரண்டாம் மற்றும் மூன்றாம் குழுவை மையப்படுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கொத்மலைஊடகப்பயிற்சிநிலையத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில்மாணவர்களுக்குவானொலி நேரடிப்பயிற்சிவழங்கப்பட்டது. மேலும் இரண்டு பகுதிகளை கொண்ட இவ் அமர்வில் கலை

நிகழ்ச்சியும் மாணவர்களின் அனுபவ பகிர்வும் இரண்டாம் மற்றும் மூன்றாம் குழு மாணவர்களின் ஏற்பாட்டில்நடைபெற்றது. இந்நிகழ்வின் முதன்மை அதிதியாக ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவரும் ஊடகத்துறையில் பல தேசிய விருதுகளை பெற்ற வானொலி அறிவிப்பாளரும் ஊடக பயிற்றுவிப்பாளருமானஏஎம்இன்ஷாப் ,விசேட அதிதிகளாக அறிவிப்பாளரும் தேசிய கல்வி நிறுவகத்தின் 'அல்பா யூ' இணையவானொலி தொகுப்பாளரும் ஊடககற்கைகளுக்கான வளவாளரும் ஆசிரியருமான கே எம் எம்.சர்ஜதீன், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன கொத்மலை ஊடகக் கற்கைகள் நிலையத்தின் இணைப்பாளர் திரு கபில குமார அரத்தன, ஆர் ஜே மீடியா வலையமைப்பின்பிரதிப்பணிப்பாளரும் இலங்கைதென்கிழக்குபல்கலைக்கழக மாணவியுமான பாத்திமா அஸ்க்கியா முபாறக், ஆர் ஜே மீடியாவின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

சுமையா சுஹைப் புகைப்பட கலைஞர் : எம். சல்பான் மற்றும்

பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும். (05)

# கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தி. பட்மின்டன் அணி தேசியமட்டத்துக்கு






(எம்.எம்.ஜெஸ்மின்)

கடந்த 25,26,27 ஆம் திகதிகளில் திருகோணமலை மெக்கெய்ஸர் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெட்மின்டன் போட்டியில்கல்முனைஅல் மிஸ்பாஹ்பாடசாலையின் 16 வயது ஆண் மாணவ அணியினர் சிறப்பான முறையில் தமது திறமைகளை வெளிக்காட்டியவண்ணம் விளையாடி இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப்போட்டிக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அணியினர் கடந்த வருடம் (2023) நடைபெற்ற மாகாண பெட்மின்டன்போட்டியில் மூன்றாமிடத்தைப்பெற்று கிழக்கு மாகாணத்தில் தமது பெயரை தடம் பதித்ததுடன் அல் மிஸ்பாஹ் பாடசாலை வரலாற்றில் மாகாண மட்ட பெருவிளையாட்டில் முதன் முறையாக வெற்றி பெற்ற அணியினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# இலவச மாதிரி வினாத்தாள் வழங்கும் நிகழ்வு ஆரம்பம்

*(பி.கேதீஸ்)*

*கொழும்புபுறக்கோட்டை இந்து இளைஞர் நற்பணி மன்றத்தால் வருடந்தோறும் தரம் 05 மாணவர்களுக்கான இலவசமாக விநியோகிக்கப்படும் முன்னோடி பரீட்சை வினாத்தாள்கள் இம்முறையும் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.*

*அந்தவகையில், 2024 ஆம் ஆண்டுக்கானமாதிரிவினாத்தாள்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு விவேகானந்தா கல்லூரி (தேசிய பாடசாலை) பிரதான மண்டபத்தில் தலைவர் எஸ். சுரேஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் மன்ற போஷகர்கள், நிர்வாகக் குழுவினர், பிரதம விருந்தினராக அதிபர் எம்.மூவேந்தன் (விவேகானந்த கல்லூரி- கொழும்பு 13) கலந்து சிறப்பிக்கவுள்ளார். கடிதங்களை அனுப்பிய கொழும்பு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டு அன்றைய தினம் உங்கள் வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள் ளப்படுகின்றனர்.*

*(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் கரையோர வீதிகள் ஊடாக 1500 கி.மீ. நடைப் பயணம்

## பேருவளை இளைஞனின் சாதனை முயற்சி



இலங்கையின் கரையோர வீதிகள் ஊடாக சுமார் 1500 கிலோமீற்றர் தூரத்தை நடந்தே கடந்து சாதனை நிகழ்த்துவதற்கான முயற்சியில் பேருவளையைச் சேர்ந்த ஸஹ்மி ஸஹீட் என்கிற இளைஞர் ஈடுபட்டுள்ளார்.

இவர் பேருவளையில் இருந்து தனது நடைபயணத்தை ஆரம்பித்து, தொடர்ந்து 15 நாள்களாக நடந்து சென்றுகொண்டிருக்கிறார்.

சனிக்கிழமை காலை நிந்தவூரில் இருந்து மட்டக்களப்பு குருக்கள்மடம் வரை தமது பயணத்தை நிறைவு செய்திருக்கிறார்.

50 நாள்கள் கொண்ட இந்த பயணத்தை கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குருக்கள்மடம் கிராமத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஆரம்பித்தார்.

நடைபயணம் மேற்கொண்டுள்ள இந்த இளைஞனை கிராமங்கள் தோறும் ஏனைய இளைஞர்கள் வரவேற்று, அவருடன் புகைப்படங்களையும் எடுத்துக்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

தனது நடைபயணம் தொடர்பில் அவர் கூறுகையில், சுதந்திரமான இலங்கையின் அழகான கரையோரத்தை காலால் நடந்து இரசிப்போம் எனும் தொனிப்பொருளில் தான் இந்த நடைபயணத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். (05)

# இறக்காமம் – வரிப்பத்தான்சேனை அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள்

## டி- 100 திட்டத்தின் கீழ்



நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் டி- 100 திட்டத்தின் கீழ் இறக்காமம்- வரிப்பத்தான்சேனை அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் வரிப்பத்தான்சேனை தலைவர் அஸ்ரப் விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீடுகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள டி-100 வேலைத்திட்டத்தினூடாக பிரதேச வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது இடங்கள், மகளிர் அமைப்புக்கள் என பல்வேறு இடங்கள் அபிவிருத்தி செய்யத்தேவையான பணிகள் இதன்மூலம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரிப்பத்தான்சேனை அமைப்பாளரும், இறக்காமம் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் என்.எம். ஆசிக், இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ. நைசர் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இறக்காமம்- வரிப்பத்தான்சேனை அபிவிருத்தி பெருவிழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மைதான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைத்ததுடன் பிரதேச



வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், மைதானங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது இடங்கள் என பல்வேறு



இடங்கள் அபிவிருத்தி செய்ய தேவையான நிதியொதுக்கீட்டு ஆவணங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இறக்காமம் பிரதேச அமைப்பாளர் எஸ்.எல். நிஷார், உயர்பீட உறுப்பினர் ஆசிரியர் ஏ. றியாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.ஏ. கலீல் ரஹ்மான், பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் ஏனைய பிரதேச இணைப்பாளர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்தியக்குழுவினர், வட்டார அமைப்பாளர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இன, மத, பிரதேச வேறுபாடுகள் இல்லாது இறக்காமம் - வரிப்பத்தான்சேனை பிரதேச மக்களுக்கு நன்மை அளிக்கும் விதமாக அமைந்துள்ள இந்த டி- 100 திட்டம் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதுடன் பெருந்திரளான மக்கள் இந்த விழாவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிறுமி மீது துஷ்பிரயோகம்; தலைமறைவாகியவருக்கு

## 13 ஆண்டு கடூழிய சிறை

கிளிநொச்சி பகுதியில் 15 வயதுக்குட்பட்ட சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தலைமறைவாகியிருந்த நபருக்கு 13 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நபர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், இந்த நபர் இதுவரை தலைமறைவாகியிருந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப் பட்டு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டதைத் தொடர்ந்தே தண்டனை தொடர்பாக அறிவிக்கப்பட்டது. (05)

# சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் குறித்து 290 முறைப்பாடுகள் பதிவு

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 290 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாதாந்தம் இவ்வாறான பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன எனவும், சிறுவர்கள் தொடர்பான அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் இருந்து கிடைத்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கம்பஹா, குருணாகல் மாவட்டங்களில் இருந்து சிறுவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகளவில் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அநுராதபுரம், இபலோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேகம பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை பல்லேகம பிரதேசத்தில் மரதன்கடவல பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 49 வயதுடைய மரதன்கடவல பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார். (05)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் உட்பட நால்வர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வர முயன்ற வெளிநாட்டு பெண் உட்பட நால்வர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 29, 200 சிகரெட்டுகள் அடங்கிய 146 சிகரெட் காட்டூன்களை மறைத்து வைத்திருந்த மலேசியாவின் கோலாலம்பூரைச் சேர்ந்த 37 வயதுடைய சீனப் பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் உள்ள கிளப் ஒன்றில் பணிபுரிபவர் என தெரியவந்துள்ளது .

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் 39,000 சிகரெட்டுகள் அடங்கிய 195 சிகரெட் பெட்டிகளை தமது பயணப் பொதிகளில் மறைத்து வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர் பாணந்துறை பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய நபரும் மத்துகம பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய சாரதி ஒருவரும் அடங்குவர்.

மேலும் 24,000 மான்செஸ்டர் ரக சிகரெட்டுகள் அடங்கிய 120 சிகரெட் பெட்டிகளை பயணப் பொதிக்குள் மறைத்து வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பாணந்துறை பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடையவர் என்பதுடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிகரெட் பெட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (05)

# நாட்டில் 10 மாதங்களில் 500 கொலைகள் பதிவு

## தங்காலையில் மாத்திரம் 22 கொலைகள்

கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 500 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டில் 488 கொலைகள் நடந்துள்ளன. அவற்றில் 52 துப்பாக்கிச் சூடு காரணமாக நடந்தவை ஆகும்.

தங்காலை, நுகேகொடை, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய ஆகிய ஐந்து பொலிஸ் பிரிவுகளில் அதிகளவான கொலைகள் பதிவாகியுள்ளன. தங்காலை பிரதேசத்தில் மாத்திரம் 32 கொலைகள் பதிவாகியுள்ளன.

நாடு முழுவதும் 2018 ஆண்டு மற்றும் 2022 ஆண்டிக்கு இடையில் 7,017 படுகொலைகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான வன்முறைக் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் எண்ணிக்கை 27 வீதத்தால் அதிகரித் துள்ளன.

ஏனைய ஆண்டுகளை விட கடந்த ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இலங்கை பொலிஸ் பிரிவின் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2024இல் வெளியிடப்பெற்றது